**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII, Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
Case No. CC 556 of 2017

Depositions of PW -1 witness for ________ Prosecution / Defence / Court

Name : மந்திரியப்பன்
Father's Name : த/பெ. ராமசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of December 2022.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது வெள்ளலூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் ஈருவரையும் எனக்கு தெரியும். அவர்களிடமிருந்து தான் நான் இடம் வாங்கினேன்.

2. 2008 ம் வருடம் பட்டணம் ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட இடத்தில் 25 செண்ட் வீட்டு இடம் சுகந்தாமணியிடமிருந்து என்னுடைய அக்காள் வசந்தாமணிக்கும், தங்கை ராஜம்மாளுக்கும் வாங்கினேன். ஒரு மாதங்கள் கழித்து என்னுடைய இரு சகோதரிகளிடமிருந்து அவ்விடத்தை நானே வாங்கி கொள்ளலாம் என்று அவர்களிடம் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேன்.

3. 6 மாதங்கள் கழித்து கிரையம் செய்து கொள்ளலாம் என்று இருந்தபொழுது போதிய பணம் இல்லாததால் கிரையம் செய்யாமல் 2, 3 வருடங்களுக்கு அப்படியே

விட்டுவிட்டேன். 2013 ம் வருடம் அவ்விடத்தை விற்று பணமாக்கி கொள்ளலாம் என்று நினைத்தபொழுது மேற்படி இடமானது ஒதுக்கப்பட்ட இடம் என்று தெரியவந்தது. அதனால் நாங்கள் மீண்டும் சுகந்தாமணியிடம் சென்று கேட்டபொழுது அவர்கள் அப்படி இல்லை என்று கூறிவிட்டார்கள்.

4. மேலும் நர்ங்கள் ஒதுக்கப்பட்ட இடமாக உள்ளது என்று கூறியதற்கு அவர்கள் அப்படி இல்லை என்று முரண்பாடாக பேசினார்கள். அதன்பின்னர் தான் புகார் அளித்தேன். ஆனால் அப்புகாரினை காவல் நிலையத்தில் பதிவு செய்யாததால் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தை அனுகி உத்தரவு பெற்ற பின்னர் தான் புகார் பதிவு செய்யப்பட்டது.

5. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகார் மனு நான் அளித்தது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>பத்திரங்களின் நகல்கள் மற்றும் வழக்கு கோப்பில் இருப்பதாலும் அசல் பத்திரங்களை சாட்சி உயர் நீதிமன்ற வழக்கில் தாக்கல் செய்திருப்பதாக கூறுவதால் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெற்று தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2022.12.15 18:16:53 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**